தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 24, பவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, ஏப்ரல் 7, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்"

எலிகள் கடல் அலைபோல் திரண்டு ஓசையிட்டாலும், நாகம் அஞ்சாது. ஆனால் நாகம் மிகச் சிறு அளவில் கூட சிலிர்த்து மூச்சு விடுமானால் எலிகள் கூட்டம் கெட்டு அழியும். (மேசையைத் தட்டும் ஒலி)

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 261, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர்.

261—

தோகைமலையில் பத்திரப் பதிவாளர் அலுவலகம் திறத்தல்

*** 9224—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) குளித்தலை தொகுதி, தோகைமலையில் பத்திரப் பதிவாளர் அலுவலகம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குளித்தலை தொகுதி, தோகைமலையில் பத்திரப் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோகைமலை என்பது குளித்தலை வட்டத்தில் வருகிறது. அங்கே அது 20 கிராமங்கள் உள்ளடக்கிய ஒரு ஒன்றியம் ஆகும். தோகைமலையில் தான் ஒன்றிய அலுவலகங்களே இருக்கின்றன. ஆகவே, வறட்சியான அந்தப் பகுதியில் மக்கள் பத்திரம் பதித்து கொள்வதற்கு ஒரு பத்திரப் பதிவு அலுவலகத்தை திறந்தால் தான் அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும். அவர்கள் நீண்ட தூரம் ஒன்று மணப்பாறை வட்டத்திற்குச் சென்று பதிய வேண்டி இருக்கிறது. அல்லது குளித்தலைக்கு சென்று பதிய வேண்டியிருக்கிறது. 20 கிலோமீட்டர் தூரம் சென்று பதிப்பதற்கு விவசாயிகளுக்கு அசௌகரியமாக இருப்பதால் இதை வருங்காலத்திலாவது அரசு செய்து முடிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வீரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோகைமலை என்பது மணப்பாறையிலிருந்து 12 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. குளித்தலை என்பது 27 கிலோ மீட்டர். நங்கவரம் 37 கிலோமீட்டர். தகரம்பட்டி என்பது 10 கிலோமீட்டர். ஆனால் ஒரு பதிவு அலுவலகம் வைக்க வேண்டும் என்றால் குறைந்தது இரண்டு ஆயிரமாவது அங்கே பத்திரங்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். ஆனால் இப்போது அருகாமையில் இருக்கிற 10 கிலோ. மீட்டரில் இருக்கிற தகரம்பட்டியில் சென்ற ஆண்டு 1,145 பத்திரங்கள்தான் வந்து இருக்கின்றன. அதேபோல நங்கவரத்திலே 766 தான் வந்திருக்கிறது. பெரிய ஊர் குளித்தலை. ஆனால் குளித்தலையில் கூட எவ்வளவு வந்திருக்கிறது என்றால் 1,146 தான் வந்திருக்கிறது. இப்படி ரொம்ப குறைவாய் இருக்கிற எல்லாவற்றையும் சேர்த்தால் கூட உங்களுக்கு வேண்டியது 1,2,3,4 அப்போது 8,000 வரவில்லை. 3,000 4,000 பத்திரங்கள்தான் வந்திருக்கின்றன. அதனாலே இங்கே தோகைமலையில் சார்புப் பதிவகம் வரும் என்று மக்களிடத்திலே தவறான தகவலை நாம் பரப்பத் தேவையில்லை, அப்படி வருவதற்கு எந்த வாய்ப்புமே இல்லை.

1995 ஏப்ரல் 7]

ஏன் என்றால் இன்றைக்கு அருகாமையில் இருக்கிற எல்லா இடங்களிலும் 1,000, 700, 1,050 என்று இருப்பதினாலேயே எந்த வாய்ப்புமே இல்லை. மணப்பாறை என்பது 12 கிலோ மீட்டர். தகரம்பட்டி என்பது 10 கிலோ மீட்டர். ஆகையால் எந்த வாய்ப்பும் இல்லை. மக்களிடத்தில் தவறான தகவலை சொல்லக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது 4 இடத்திலேயும் குறைவாகப் பத்திரப் பதிவு நடைபெறுகின்றன என்று சொன்னார்கள். நான் தகவலுக்காக ஒன்றை சொல்ல விரும்புகிறேன். அந்தப் பகுதி இருக்கிறது வறட்சிப் பகுதி. அங்கே விவசாயிகள் விளைநிலங்களை கம்மியான விலையில் விற்றாலும் அரசு அதிக விலைப் போட்டு இருப்பதால் பத்திரப் பதிவுகளை எல்லாம் கேரள மாநிலம் சென்று பதிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மை. ஆகவே, அதைத் தடுத்து இந்தப் பத்திரப் பதிவுத் தாள்களைப் பெருக்குவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா அலலது விவசாய விளை நிலங்களை வாங்கும்போது ஏதாவது பத்திரப் பதிவிலே கன்செஷன் அதாவது சலுகை அளிக்கப்படுமா என்பதையும் அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிற்குப் போகிறதா இல்லையா என்பது தனிக் கேள்வி. ஆனால், கேரளாவிற்குப் போகாமல் இருப்பதற்கு அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் எடுக்கும். இங்கே பத்திரங்கள் அதிகம் பதிவதற்கு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல், ஆண்டுதோறும் இந்தப் பத்திரத்தினுடைய விலையை, குறியீட்டு விலையை ஏற்றுவதைக் குறைக்க வேண்டுமென்றும், இந்த ஆண்டிலேயிருந்து விவசாய நிலங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அதனுடைய மதிப்பைக் குறிப்பிடுவதனால் விவசாய நிலங்களுடைய விலை ஏற்றத்திற்கு ஏற்றவாறு பத்திரத்தினுடைய பதிவு சார்ஜும் குறையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 262—திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.